1979 நவம்பர் 8]

திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே' அமைச்சர் அவர்களுக்கு இதற்காக நான் நன்றி கூறிக் கொண்டு, மேலும் சேலம் மாவட்டத்தில் எங்கெங்கே பின் தங்கிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை என்றாலும், இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பிற்பட்ட மாணவர் இல்லங்களைவிட அதிகமான அளவு பிற்பட்ட மாணவர் இல்லங்களைத் அடுத்த ஆண்டு அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* வினா எண் 148—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை ஜில்லா ஒட்டப்பிடாரம் தாலுகாவிலுள்ள கட்டபொம்மன் கோட்டையை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஆக்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசின் நடவடிக்கை யாது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) கட்டபொம்மன் கோட்டை ஏற்கனவே சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத்தான் இருந்து வருகிறது.

(ஆ) மேலும் வசதிகள் செய்யவும், மக்களுக்கு விளம்பரப் படுத்தவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ரா. கு. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றி சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் ஏதாவது தொழிற்சாலையை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன்: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டை பயணிகள் அதிகமாகத் தங்கும் சுற்றுலாத் தலம் என்று அமைச்சரின் செயலரே சொல்லியிருக்கிறார்கள். அங்கே பக்கத்தில் உள்ள கயத்தாறு விமான தளம்

வீணாக இருக்கிறது. ஆகவே சென்னையிலிருந்து கயத்தாறு விமான தளத்திற்கு விமான சர்வீஸ்விட ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன்: (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பே இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டை பயணிகள் வந்து தங்கும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்றுஏற்கனவே சொல்லி விட்டார்கள். இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற பிறகு இந்த கட்டபொம்மன் கோட்டையில் பயணிகளை கவர்வதற்கு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டையை மிகச் சிறந்த முறையில் சுற்றுலா சின்னமாக பயன்படுத்தும் பொருட்டு தற்போது சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தங்கும் விடுதிகளில் மேசை, நாற்காலி, கட்டில் போன்ற வசதிகளும், அதனுடன் நல்ல முறையில் சிற்றுண்டி வசதியும் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடியிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக குறுக்கு சாலை, தூத்துக்குடி பேருந்து நிலையம், திருநெல்வேலி சாலையிலுள்ள மேலூர் ஆகிய இடங்களில் பெரிய விளம்பரப்பலகைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டையை இவ்வளவு பரிவாக பராமரிக்கும் இந்த அரசு அதற்கு நாயகரான கட்டபொம்மனை நடு வீதியிலே நிற்க வைக்கின்ற முறையில் கட்டபொம்மன் சிலை நின்று கொண்டிருப்பதை அறியுமா? அந்த கட்டபொம்மனுடைய சிலையை நன்கு அலங்கரித்து அந்த இடத்தையும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்ற அரசு முயற்சி எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ஐசரி வேலன்: (அமைச்சரின் பேரவைச் செயலர்):— பேரவைத் தலைவர் அவர்களே. கட்டபொம்மன் அவர்களுடைய வீரத்தை, சுதந்திரத்திற்காக அவர் செய்த தியாகத்தை நாட்டு மக்களுக்கு எடுத்து காட்டும் வகையிலே தான் இந்த சிலை நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் சிலை மதிப்பிற்குரிய திரைப்பட நடிகர் திரு. சிவாஜிகணேசன் அவர்களுடைய செலவிலே நிறுவப்பட்டிருக்கிறது. திரு. சிவாஜிகணேசன் அவர்களே என்னிடம்

[1979 நவம்பர் 8]

இந்தச் சிலையைப் பராமரிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார். அந்த வேண்டுகோள் கடிதம் மூலமாக விண்ணப்பம் செய்யப்படுமே யானால், அது பற்றிய இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி:— கட்டபொம்மன் கோட்டையைப் புதுப் பிப்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. கமுதியில் கட்டபொம்மன் கோட்டை ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. அதைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— உறுப்பினர் அவர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கருவேல மரம் வளர்ப்பு.

வினா எண். 149 திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா;

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பொதுப்பணித் துறை ஆயக்கட்டு ஏரிகளில் கருவேல மரம் வளர்ப்புத் திட்டம் உள்ள ஏரிகள் எத்தனை?

(ஆ) அனைத்து ஏரிகளிலும் வளர்ப்புத்திட்டம் செயல் படுத்த செயற்குறிப்பு உண்டா?

(இ) ஆமெனில் விபரம் என்ன?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) 106 ஏரிகள்.

(ஆ) ஆம்.

(இ) 50,000 ஹெக்டேர் பரப்பில் இதுவரை 6,500 ஹெக் டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மிகுதி உள்ள பரப்பில் (408 ஏரிகளில்) வன விரிவாக்கத் திட்டம் (Extension Forestry) மற்றும் கலப்பின (Mixed Plantations) தோட்டத் திட்டத்தின் கீழ் வருங்காலங்களில் மீதியுள்ள 408 ஏரிகளில் தோட்டங்கள் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இதுபோன்ற பொதுப்பணித் துறை ஏரிகளில் மரங்களை வளர்த்துவிடுகிற காரணத்தால் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் வேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை கைவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— இத் திட்டத்தினால் ஒரு இலட்சம டன் நிறைவுள்ள மரங்கள் கிடைக்க இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தோட்டங்கள் தோற்றுவிப்பதற் கான செலவு ரூ. 16 இலட்சம் ஆகிறது. இத்திட்டத்தின் கீழ்